## ஸ்தல மகிமை




| | | | |
|---|---|---|---|
| சந் | | கேது குரு | ல |
| | தேவ ப்ரஷ்ணம் | | |
| | | | சுக் |
| | ராகு செவ் | புதன் சனி | சூ |

ஸ்வாமி அம்பாள் மிக வரப்ரஸாதி. ஸ்தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூவகையிலும் சிறப்பு பெற்ற தலமாகும்.

இத்தலம் மனோகாரக ஷேத்ரமாகும். மனது சம்பந்தமான விஷயங்கள் மற்றும் பிரச்சனைகள் யாவும் தீரும் அற்புத ஸ்தலம்.

மனக்கஷ்டம், மனவெறுப்பு, மனம்புண்படுதல் யாவும் இங்கு நீங்கும் இங்கு பெருமாளையும் அம்மையையும் வழிபட்டு பல யோகிகள், ஞானிகள், சித்த புருஷர்கள் பேறு பெற்ற ஸ்தலமாகும்.

அவர்களுள் இராமநாம யதீந்திராள் என்னும் பெரியவர்கள் இங்கு அதை, அதாவது ராமநாமவை ஈஷ்வரன் சன்னதியில் ஜபம் செய்து ஸித்தி பெற்று பல பல அற்புதங்கள் நிகழ்த்திய ஷேத்ரமாகும்.

**அவர்களின் அதிஷ்டானம் இத்தலத்திலேயே உள்ளது.**


Printed @ Welcome Enterprisrs : 2259 2177, 99406 14249.




உ

ஸ்ரீ குருப்யோ நம:

மஹா பெரியவா சரணம்



திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம்,
சைதன்யபுர ஆஸ்திக ஸமாஜத்தை சேர்ந்த

# சைதன்யபுரம் (எ) சேதினிபுரம்
# ஸ்ரீ சக்தி கணபதி ஆலய

**அஷ்டபந்தன (18 கால யாக சாலை பூஜைகளுடன்)**
**மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை.**

நாள் : ஜய ஆண்டு ஆவணி திங்கள் 15-ம் நாள்
(31-08-2014) ஞாயிற்றுக்கிழமை காலை 6:15 - 7:00

Thiruvarur District, Kudavasal Taluk,
Chaithanyapuram Asthika Samaj (Regd),
*Chaithanyapuram @ Sethanipuram*

## Sri Sakthi Ganapathy Temple
*(with 18 Kala Yaghasala Poojas)*

## Maha Kumabhabhishekam Invitation

*Date : Jaya Varsha Avani month 15th (31.08.2014)*
*Sunday morning 6:15 - 7:00*

**www.sethanipuram.com, Mob : 90030 34098.**







திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம்,
சைதன்யபுர ஆஸ்திக ஸமாஜத்தை சேர்ந்த

# சைதன்யபுரம் (எ) சேதினிபுரம்

# ஸ்ரீ சக்தி கணபதி ஆலய

**அஷ்டபந்தன (18 கால யாக சாலை பூஜைகளுடன்) மஹா கும்பாபிஷேகப் பத்திரிகை**

**நாள் : ஜய ஆண்டு ஆவணி திங்கள் 15-ம் (31-08-2014) ஞாயிற்று கிழமை காலை 6:15 - 7:00**

[illegible] ॥ 1 ॥
[illegible] ॥ 2 ॥
[illegible] ॥ 3 ॥

அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்த ரூபிணம்
ஸ்ரீ சந்த்ர சேகர குரும் ப்ரணமாமி முதான்வஹம்!

நமஸ்காரம்

புண்ய பூமியும், கர்ம பூமியும் ஆன இந்த அகண்ட பாரத தேசத்தின் உயிர்நாடியாக அஸ்திவாரமாக இருப்பதும், பாரத தேசத்தின் எதிர் காலத்திற்கு உயிர் நாடியாக இருப்பதுவும் ஆன, சனாதன தர்மம் தழைத்தோங்கும் பொருட்டு, நம் ஆதிகுருவான ஸ்ரீ ஆதிசங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஷண்மதங்களில் முதலாவதாக உள்ளது காணபத்யம் என்று சொல்லக்கூடிய கணபதி வழிபாட்டுமுறை.

அனைத்து உபாசனா முறைக்கும் அடிப்படையான விஷயம் கணபதி. கணபதியின் உபாஸனையானது உபாசகனுக்கு தெளிவு, அறிவு, ஞானம், வெற்றி, தர்மசிந்தனை, தடுமாறாத மனம், புத்தி, வைராக்யம், இஷ்டபிராப்தி என்று சொல்லக்கூடிய அனைத்து நற்பேறுகளையும் அளிக்கக்கூடியது.

தக்ஷிணபாரதம், தமிழ்நாட்டில் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பே கணபதி வழிபாடு என்பது வழக்கத்தில் உள்ள வழிபாட்டு முறையாகும். தமிழகத்தில் உள்ள முக்கியமான கணபதி க்ஷேத்திரங்களுள் மிக முக்கியமானதும், இறைவன் திருஉள்ளப்படி இது வரையில் பிரபலமாகாததும் ஆன ஒரு ஸ்தலம் சைதன்யபுரம் என்கிற சேதினிபுரம்.

சேதினிபுரம் திருவாரூர் மாவட்டத்தில் குடவாசல் வட்டத்தில் ஸ்ரீவாஞ்சியம், திருக்கண்ணமங்கை, நாச்சியார்கோயில் மற்றும் திருவீழிமிழலை க்ஷேத்ரங்களுக்கு நடுவில் முடிகொண்டான் நதியின் தென்புறம் அமைந்துள்ள அழகான கிராமம் வேதமும் நாமசங்கீர்த்தனமும் தழைத்து வளரும் ஊர். ஊரைச்சுற்றி ஸ்ரீ விநாயகர், சிவன், பெருமாள், ஐயனார், பிடாரிஹரி, காளியம்மன் மற்றும் மஹாமாரியம்மன் ஆலயங்கள் **காஞ்சி ஸ்ரீ ஸ்ரீ மஹா பெரியவாள், ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள், மைசூர் ஸ்ரீ கணபதி ஸச்சிதானந்த ஸ்வாமிகள் போன்ற மஹான்கள் விஜயம் செய்து** அருளாசி வழங்கிய ஊர். ஸ்ரீ பாண்டுரங்கனின் பரம பக்தரான **ஸ்ரீஸ்ரீ கோதண்டராம ஸ்வாமிகள் என்ற மஹான்** அவதாரஸ்தலம். **மேலும் ஸ்ரீராமநாம யதீந்த்ரராள்** ஈஸ்வர சன்னிதியில் ராமநாமாவை தொடர்ந்து ஜபித்து ஸித்தி பெற்று பல அற்புதங்களை நிகழ்த்திய **ஸ்தலம். இத்தலம் மனோகாரக க்ஷேத்ரம். மனது ஸம்பந்தமான விஷயங்கள் பிரச்சனைகள் யாவும் தீரும் அற்புத ஸ்தலம்.** ஸ்ரீ காயத்ரி உபாஸனையாலும் அபாரமான தனது யோக சக்தியாலும் பகவத் அம்சமாய் அவதாரம் செய்து ஸ்ரீ யோகீஸ்வர யாக்ஞவல்க்யர் என்ற மஹான் துவாபர யுகத்தின் கடைசியில் அப்போதே சூர்யமண்டலம் சென்று ஸ்ரீ சூரியபகவானிடமே வேதத்தை கற்று பூவுலகில் பிரச்சாரம் செய்தார். ஸ்ரீ சூர்ய பகவானிடம் இருந்தே குப்தமாக இருந்து இந்த வேதத்தை இவர் கற்றதால் பழகிய தோஷம் (அயாதயாமம்) இல்லாத வேதம். சூர்யபகவானிடமிருந்து நேர்பரம்பரையில் வந்ததால் "சுக்லம்" (சூர்ய ஒளி) உடையது என்றும் "சுக்லயஜுர்" வேதம் என்றும் கூறப்பட்டது. பகவான் கல்கி அவதாரம் செய்யும் போது ஸ்ரீ யோகீஸ்வர யாக்ஞவல்க்யரே அவருக்கு குருவாக வருவார் என்றும் சான்றோர்கள் கூறுகின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள மஹா ஜனங்கள் இப்பெருமை மிக்க அவ்வேதத்தைச் சார்ந்தவர்கள். இக்கிராமத்தில் உள்ள ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள பிள்ளையார் மிகவும் வரசித்தியானவர். அவரின் அற்புதங்களை உணர்ந்தவர்கள் பலர்.

குருமண்டல ஸ்வரூபிணியான ஸ்ரீ பராசக்தியின் ஆக்ஞையினாலும் குருமார்களின் கிருபையினாலும் இத்திருகோயிலின் கும்பாபிஷேகம் 18 கால யாக சாலை பூஜைகளுடன் மிக க்ரமமாக வேத, தாந்திரிக முறைப்படி நடைபெற உள்ளது.

ஆஸ்திக மெய்யன்பர்கள் அனைவரும் இந்த காணக்கிடைப்பதற்கு அரிய வைபவத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ சக்தி கணபதி அருளுக்கு பாத்திரமாகி வாழ பிராத்திக்கும்

**சைதன்யபுர ஆஸ்திக ஸமாஜ்**
சேதினிபுரம்

**Donation can be transferred to the following Trust Account:**

**Name : Sri Chaithanyapura Asthika Samaj - City Union Bank Ltd, Nachiarkoil**

**A/C No. 196001001787107 IFSC : CIUB 0000196 Ph No: 90030 34098**

**ஸர்வ ஸாதகம் : ஸாக்தஸ்ரீ சுதாகர ஸர்மா, சென்னை**

குறிப்பு : யாகசாலை பூஜை காலங்களில் சதுர்வேத பாராயணமும், சமய சொற்பொழிவுகளும்,
சத ப்ராமண போஜனமும் நடைபெறும்

# யாகசாலை நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| ஜய வருடம்<br>ஆவணி மாதம் 6-ம் தேதி<br>22.08.2014,<br>வெள்ளி கிழமை | காலை 7:00 – 10 மணி<br><br>மாலை 5 மணி | கோபூஜை, அனுக்ஞை, சுவாமி அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம், நவக்கிரகஹோமம், லக்ஷ்மி ஹோமம், தனபூஜை, நட்சத்திர ஹோமம்.<br>வாஸ்துசாந்தி, கிராமசாந்தி,பிரவேச பலி, ப்ரதிசார பந்தம், கும்பஅலங்காரம், யாகசாலாப்ரேவேசம்,யாகசால முதற்கால பூஜா பூர்ணாஹீதி தீபாராதனை |
| 7-ம் தேதி,<br>23.08.2014<br>சனிக்கிழமை | காலை 7 மணி<br><br>மாலை 5 மணி | 2-ம் கால யாகசால பூஜைகள் வல்லப கணபதி விஷேச ஹோமம்<br>பூர்ணாஹீதி தீபாராதனை<br>3-ம் கால யாகசால பூஜைகள் ஷரிர்ரா கணபதி விஷேச ஹோமம்<br>பூர்ணாஹீதி தீபாராதனை |
| 8-ம் தேதி<br>24.08.2014<br>ஞாயிற்று கிழமை | காலை 7 மணி<br>மாலை 5 மணி | 4-ம் கால யாகசால பூஜைகள் ஹேரம்ப கணபதி விஷேச ஹோமம்<br>5-ம் கால யாகசால பூஜைகள் பால கணபதி விஷேச ஹோமம் |
| 9-ம் தேதி 25.08.2014<br>திங்கட்கிழமை | காலை 7 மணி<br>மாலை 5 மணி | 6-ம் கால யாகசால பூஜைகள் வாஞ்சா கல்பலதா கணபதி விஷேச ஹோமம்<br>7-ம் கால யாகசால பூஜைகள் ஸ்ரீவித்யா கணபதி விஷேச ஹோமம் |
| 10-ம் தேதி 26.08.2014<br>செவ்வாய் கிழமை | காலை 7 மணி<br>மாலை 5 மணி | 8-ம் கால யாகசால பூஜைகள் லக்ஷ்மி கணபதி விஷேச ஹோமம்<br>9-ம் கால யாகசால பூஜைகள் துர்கா கணபதி விஷேச ஹோமம் |
| 11-ம் தேதி 27.08.2014<br>புதன் கிழமை | காலை 7 மணி<br>மாலை 5 மணி | 10-ம் கால யாகசால பூஜைகள் லக்ஷ்மி சங்க நிவாசினி விஷேச ஹோமம்<br>11-ம் கால யாகசால பூஜைகள் தருண கணபதி விஷேச ஹோமம் |
| 12-ம் தேதி 28.08.2014<br>வியாழக் கிழமை | காலை 7 மணி<br>மாலை 5 மணி | 12-ம் கால யாகசால பூஜைகள் ருணவிமோசன கணபதி விஷேச ஹோமம்<br>13-ம் கால யாகசால பூஜைகள் ஸ்வேதார்க கணபதி விஷேச ஹோமம் |
| 13-ம் தேதி 29.08.2014<br>வெள்ளி கிழமை | காலை 7 மணி<br>மாலை 5 மணி | 14-ம் கால யாகசால பூஜைகள் தூர்வா கணபதி விஷேச ஹோமம்<br>15-ம் கால யாகசால பூஜைகள் உச்சிஷ்ட கணபதி விஷேச ஹோமம் |
| 14-ம் தேதி 30.08.2014<br>சனிக்கிழமை | காலை 4 மணி | 16-ம் கால யாகசால பூஜைகள் "க" கார ஸகஸ்ரநாம ஹோமம்<br>17-ம் கால யாகசால பூஜைகள் கோ, கஜ, அஸ்வ பூஜா, கலா ஹோமம், விமானபரிவார தேவதா ஹோமம், யந்தரப்ரிதிஷ்டை, பூர்ணாஹீதி தீபாராதனை |
| 15-ம் தேதி 31.08.2014<br>ஞாயிற்று கிழமை | 6.30 மணி முதல் 7.00<br><br><br>9.00 மணி<br><br>10.00 மணி | 18-ம் கால யாகசால பூஜைகள், முலமந்தர ஹோமம், நாடீ சந்தானம், ஸ்பரிசாஹீதி, ப்ரானப்ரதிஷ்டை ப்ரதான யாகசாலை பூர்ணாஹீதி, யாத்ராதானம், கடம் புறப்பாடு<br>விமான மஹாகும்பாபிஷேகம்,<br>முலஸ்தான மஹாகும்பாபிஷேகம்,<br>மஹா அபிஷேகம்,<br>அன்னதானம். |